**செய்தி வெளியீடு எண்: 419** **நாள்: 30.06.2018**

**<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (30.06.2018), சேலம் மாவட்டம், எடப்பாடியில் நடைபெற்ற விழாவில் ஆற்றிய உரை:</u>**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

சேலம் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கியினுடைய மல்லியக்கரை மற்றும் கருப்பூர் புதிய கிளைகள் துவக்க விழா, கருப்பூர் துணை காவல்நிலைய துவக்க விழா மற்றும் எடப்பாடியில் மத்திய கூட்டுறவினுடைய புதிய கிளை துவக்க விழா, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழா, முடிவுற்றப் பணிகள் திறப்பு விழா, அரசு நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழா, அத்தனை திட்டங்களுக்கும் இன்றைய தினம் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக இன்றைக்கு அடிக்கல் நாட்டப்பட்டு, துவக்கப்பட்டு, நலத்திட்ட உதவிகள் வழங்குகின்ற இந்த அற்புதமான நிகழ்ச்சிக்கு

தலைமைதாங்கி, தலைமையுரை ஆற்றிய நம்முடைய மாண்புமிகு கூட்டுறவுத் துறையினுடைய அமைச்சர் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய செல்லூர் ராஜூ அவர்களே!

இந்த நிகழ்ச்சியில் வரவேற்புரை ஆற்றிய மாவட்ட வருவாய்த் துறை அதிகாரி மரியாதைக்குரிய சுகுமார் அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே முன்னிலை வகித்துக் கொண்டிருக்கிற நாடாளுமன்ற உறுப்பினர் திரு.பன்னீர்செல்வம் அவர்களே!

மாநில கூட்டுறவு வங்கியின் தலைவர் திரு. இளங்கோவன் அவர்களே!

இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற முன்னாள் அமைச்சர், சட்டப்பேரவை உறுப்பினர் மதிப்பிற்கும் மரியாதைக்குரிய செம்மலை அவர்களே!

சேலம் மேற்குத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. வெங்கடாசலம் அவர்களே!

சேலம் தெற்குத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. சக்திவேல் அவர்களே!

வீரபாண்டி சட்டப்பேரவை உறுப்பினர் திருமதி. மனோன்மணி அவர்களே!

சங்ககிரி சட்டப்பேரவை உறுப்பினர் திரு. ராஜா அவர்களே!

ஓமலூர் சட்டப்பேரவை உறுப்பினர் திரு. வெற்றிவேல் அவர்களே!

ஆத்தூர் சட்டப்பேரவை உறுப்பினர் மரியாதைக்குரிய சின்னத்தம்பி அவர்களே!

கெங்கவள்ளி சட்டப்பேரவை உறுப்பினர் மரியாதைக்குரிய மருதமுத்து அவர்களே!

மற்றும் இந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர்கள் மரியாதைக்குரிய மாதேஸ் அவர்களே, கே.கே.மணி அவர்களே!

நகர் மன்றத் தலைவர் திரு.கதிரேசன் அவர்களே!

முன்னாள் நகர் மன்ற துணைத் தலைவர் மரியாதைக்குரிய ராமு அவர்களே!

முன்னாள் மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் திரு.ராஜேந்திரன் அவர்களே!

எடப்பாடி மாவட்ட முன்னாள் ஊராட்சிக் குழு உறுப்பினர் திரு.மாரீசன் அவர்களே!

மற்றும் இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டிருக்கின்ற நம்முடைய மாநகரத்தின் ஆணையர் அவர்களே!

காவல்துறை கண்காணிப்பாளர் அவர்களே!

மற்றும் அதிகாரி பெருமக்களே!

வருகை தந்திருக்கின்ற பெரியோர்களே! தாய்மார்களே!

கழகத்திலே பல்வேறு பொறுப்புகளை வகிக்கின்ற நிர்வாகிகளே,

பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே!

நன்றியுரை ஆற்றவிருக்கின்ற இணைப் பதிவாளர் மரியாதைக்குரிய ராஜேந்திர பிரசாத் அவர்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய முதற்கண் நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

பொன்மனச்செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை உருவாக்கி நாட்டு மக்களுடைய ஏகோபித்த ஆதரவை பெற்று, முதன்முதலாக தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்ற நாள் இந்த நாள், **30.6.1977.** அதிலிருந்து சுமார் **11** ஆண்டுகாலம் இந்த நாட்டு மக்களுக்கு அற்புதமான ஆட்சியைத் தந்தார்கள். பல்வேறு திட்டங்களை நாட்டு மக்களுக்கு வாரி வழங்கினார்கள். கிராமத்தில் இருக்கின்ற மக்களுக்கான அடிப்படைத் தேவைகள் முழுமையாக அவருடைய ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றப்பட்டது. அவருடைய மறைவிற்குப் பிறகு, இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பொன்மனச்செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்

விட்டுச் சென்ற பணியை தொடர்ந்து பணியாற்றி, 15 ஆண்டுகாலம் ஒரு நிலையான ஆட்சியை தமிழக மக்களுக்கு வழங்கிய பெருமை அம்மாவைச் சாரும். மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சிக் காலத்தில்தான் பல்வேறு திட்டங்களை உருவாக்கித் தந்தார்கள். இன்றைக்கு தமிழகத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற திட்டங்கள் அனைத்திலும், அம்மாவினுடைய ஆட்சியில்தான் பெரும்பாலான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். இருபெரும் தலைவர்கள் உருவாக்கிய இயக்கம் இந்த இயக்கம். பொன்மனச்செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசை உருவாக்கி, முதன்முதலாக தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்ற இந்த இனிய நாளில் உங்களை எல்லாம் சந்திப்பதில் நான் பெருமை கொள்கின்றேன் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு பல்வேறு புதிய திட்டங்கள் திறந்து வைக்கப்பட்டு, சில திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டு, அதோடு, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்ட ஒரு சிறப்பான நிகழ்ச்சியின் வாயிலாக, நம்முடைய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கூட்டுறவுத் துறையின் மூலமாக விவசாயிகளுக்கு பயிக்கடன் வழங்குவது பற்றிச் சொன்னார்கள். வறட்சிக் காலத்திலே, விவசாயிகளுக்கு எந்தளவிற்கு உதவிகள் செய்தோம் என்பதையும் சுட்டிக்காட்டினார்கள். வறட்சிக் காலத்தில், விவசாயிகளின் பயிர் கருகிய காரணத்தால், பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் மூலமாக இந்திய வரலாற்றிலேயே அதிகமாக நம்முடைய தமிழகத்தில் தான், பயிர் காப்பீட்டுத் திட்டத்திற்காக ரூபாய் 3200 கோடி ரூபாயை பெற்றுத் தந்த அரசு அம்மாவினுடைய அரசு என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற விளைபொருட்களை பத்திரமாக பாதுகாக்க கிடங்குகள் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. விவசாயிகளால் உற்பத்தி செய்யப்பட்ட விளைபொருட்களின் விலை வீழ்ச்சியடைகின்றபொழுது, அந்த விளைபொருட்களை கூட்டுறவு

சங்கத்தால் கட்டப்பட்ட கிடங்குகளில் வைத்து, குறைந்த வட்டியிலே கடனைப் பெற்று, விளை ஏறுகின்றபொழுது அந்த விவசாயிகள் விற்பனை செய்து கொள்ளக்கூடிய வசதியை செய்து கொடுத்திருக்கின்றோம். இதற்கு முன்பாக, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற காலத்திலே அனைத்துத் தொகுதிகளிலும் கிடங்குகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தொடக்க வேளாண் வங்கியில், விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய விளைபொருட்களை வைத்து கடனுதவி பெறலாம். அப்படிப்பட்ட திட்டத்தை அம்மா அவர்கள் கொண்டு வந்தார்கள். வேறு எந்த ஆட்சியிலும் கொண்டு வரவில்லை. ஏனென்றால் விவசாயிகளின் பணி தான் சிறந்த பணி.

கிட்டத்தட்ட 65 சதவிகிதம் விவசாயிகள் வாழ்கின்றார்கள், விவசாயத் தொழிலாளர்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்கும் முதன்மையாக இந்த அரசு செயல்படுகின்றது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விழைகின்றேன். அதனால்தான், அந்த விவசாயிகளுக்கு வேளாண் கருவிகளை இலவசமாகக் கொடுத்திருக்கின்றோம். சூரிய சக்தியில் இயங்கக்கூடிய மின் மோட்டார்கள் கொடுக்கின்றோம். சொட்டு நீர் பாசனக் கருவி கொடுக்கின்றோம். விவசாயிகள் வளர்க்கின்ற கால்நடைகள் நோய்வாய்ப் படுகின்றபொழுது அதற்கு சிகிச்சை அளிக்கக்கூடிய கால்நடை மருந்துவமனைகள் நிறைய திறந்திருக்கின்றோம், புதிய மருத்துவர்களை நியமித்திருக்கின்றோம். புதிய கால்நடை மருந்துக் கிடங்குகள் திறந்திருக்கிறோம். ஒரு அரசாங்கம் விவசாயிகளுக்கு என்ன செய்ய வேண்டுமோ அத்தனையும் அம்மாவின் அரசு செய்திருக்கிறது.

அதுபோல, ஆங்காங்கே ஏரிகள், குளங்களில் இருக்கின்ற வண்டல் மண்ணை விவசாயிகள் இலவசமாக அள்ளி தங்களுடைய நிலங்களுக்கு எருவாக, இயற்கை உரமாக இடுவதற்கான ஒரு நிகழ்ச்சி அம்மாவினுடைய ஆட்சியில்தான் உண்டு, வேறு எந்த ஆட்சியிலும் கிடையாது. அந்தக் காலத்தில் ஒரு லோடு மண் கொண்டு சென்றாலும் பிடிப்பார்கள், இன்றைக்கு அந்த நிலைமை கிடையாது. வீடுகட்டுவதற்குத் தேவையான

மணலை அனுமதி வாங்கி அள்ளிக் கொள்ளலாம். இதையும் அம்மாவினுடைய ஆட்சியில்தான் கொடுத்திருக்கின்றோம். இப்படி, பார்த்துப் பார்த்து மக்களுக்கு வசதிகள் செய்து கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். மக்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை ஆராய்ந்து, உங்கள் மூலமாகவும், அதிகாரிகள் மூலமாகவும் தெரிந்து, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் மூலமாக தெரிந்து அம்மாவினுடைய அரசு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது.

இன்றுகூட, ஊனமுற்றவர்கள் 90 நபர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் கொடுத்திருக்கின்றோம். இவையெல்லாம் ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, அந்த சாதாரண மக்கள்கூட நல்லபடியாக பயணம் செய்ய வேண்டுமென்பதற்காக ஒரே நேரத்தில் இவ்வளவு நபர்களுக்குக் கொடுத்திருக்கின்றோம்.

அதேபோல, வீட்டுமனைப் பட்டா இல்லாதவர்களுக்கு வீட்டு மனைப்பட்டா கொடுத்திருக்கின்றோம். இலவச வீட்டு மனை இல்லாதவர்களுக்கு புதிய வீட்டு மனை தருகின்றோம். பசுமை வீடுகள் கட்டிக் கொடுக்கின்றோம். அதுமட்டுமல்லாமல், நீண்ட, நெடிய நாட்களாக, பல ஆண்டுகளுக்கு முன்பு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட வீடுகள், தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்கு கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகள் எல்லாம் மழை பொழிகின்றபொழுது, நீர் கசிகின்றது என்று கூறியதற்கு, அம்மாவினுடைய அரசு நிதி ஒதுக்கீடு செய்து சுமார் 45 ஆயிரம் வீடுகள் வருகின்ற நடப்பாண்டிலே கட்டித் தரப்படும், கூரையை உடைத்து, புதிய கான்கிரீட் கூரை அமைத்துக் கொடுக்கப்படும். கிராமத்திலே வாழ்கின்ற ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட மக்கள்கூட பாதிக்கப் படுகிறார்கள் என்றால், அரசினுடைய கவனத்திற்கு கொண்டுவந்தால், அவைகளும் நிறைவேற்றித் தரப்படும்.

அதுமட்டுமல்லாமல், இன்றையதினம் பல்வேறு பிரச்சினைகள். பசுமை வழிச்சாலையை ஒரு பெரிய பிரச்சினையாக எடுத்துச் செல்கிறார்கள். அம்மா அவர்கள் இருக்கும்பொழுது, எடப்பாடியில் புறவழிச்சாலை அமைக்க வேண்டுமென்று சொன்னேன், இன்றைக்கு முழுவதும்

முடிக்கப்பட்டுள்ளது. சாலை அமைத்த காரணத்தால், கனரக வாகனங்கள் நகரத்திற்குள் வராமல், புறவழிச் சாலை வழியாக செல்வதால் விபத்து குறைகின்றது, பாதுகாப்பான பயணம் ஏற்படுகிறது. சாலையை விரிவுபடுத்த வேண்டுமென்றால் எடப்பாடியில் பாதி ஊரே இருக்காது. நகருக்குள் எடுத்துக்கொண்டால், சாலையின் இருபுறங்களிலும் 15 மீட்டர் எடுத்தால் பாதி வீடே இருக்காது. அம்மா அவர்களிடம் சொன்னவுடன், ஆர்.எஸ்.புரத்திலிருந்து புறப்பட்டு, நெடுங்குளம் ரோடு, நெடுங்குளம் ரோட்டிலிருந்து கூலாம்பட்டி ரோடு, கூலாம்பட்டி ரோட்டிலிருந்து ஜலகண்டபுரம் ரோடு, ஜலகண்டபுரம் ரோட்டிலிருந்து கொங்கணாபுரம் ரோடு, கொங்கணாபுரம் ரோட்டிலிருந்து சங்ககிரி ரோடு, என பல்வேறு சாலைகளை இணைக்கின்ற மிகப்பெரிய திட்டம், இந்தத் திட்டங்களெல்லாம், நம்முடைய எடப்பாடி மக்கள் மனமுவந்து நிலம் கொடுத்த காரணத்தினால், அருமையான சாலை அமைக்கப்பட்டு இன்றைக்கு அந்த சாலையை திறந்து வைத்துள்ளேன்.

ஒரு நாடு வளர்ச்சியடைய வேண்டுமென்று சொன்னால், உட்கட்டமைப்பு மிக முக்கியம், நல்ல சாலைகள் இருக்க வேண்டும், அப்பொழுதுதான் புதிய, புதிய தொழிற்சாலைகளை அமைக்கமுடியும். இன்றைக்கு இலட்சக்கணக்கான இளைஞர்கள் படிக்கின்றார்கள், இந்தியாவிலேயே உயர்கல்வி படிப்பவர்களின் எண்ணிக்கை தமிழகத்தில்தான் உயர்ந்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தமிழகத்தில் இருந்தது, மத்தியிலே காங்கிரஸ் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதில், திராவிட முன்னேற்றக் கழகம் அங்கம் வகித்தது. அவர்கள் வீரவசனம் பேசுவார்களேயொழிய, அவர்களுக்கு கொள்கையே கிடையாது. அவர்களுக்கு அதிகாரமும், பதவியும்தான் முக்கியம். முதலில் பாரதீய ஜனதாவை மோசம் என்று சொன்னார்கள், இந்த இடத்தில் பேசக்கூடாது, இருந்தாலும் சில விளக்கங்களை கொடுப்பது பொருத்தமாக இருக்கும். முதலில் முடியாது என்றார்கள், கூட்டணியிலிருந்து விலகியவுடன் ஒட்டிக் கொண்டார்கள். ஒரு 5 வருடம் ஓட்டினார்கள். அதேபோல, காங்கிரஸிலும் இடம் பெற்றிருந்தார்கள். 14 ஆண்டுகாலம் மத்தியில் ஆட்சி, அதிகாரத்தில் இருந்தீர்களே, என்ன கொண்டு வந்தீர்கள்? எந்தத் திட்டங்களையாவது தமிழகத்திற்கு கொண்டு

வந்திருக்கின்றீர்களா ? புதிய திட்டமே வரவில்லை. ஒரு சில திட்டங்களைத் தவிர எதுவுமே வரவில்லை. அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் திரு.வாஜ்பாய் அவர்கள் இந்திய நாட்டின் பிரதமராக இருந்தபொழுது சாலைகளையெல்லாம் சிறப்பாக கொண்டு வரவேண்டுமென்ற ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அப்பொழுது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு.டி.ஆர்.பாலு தான் தரைவழிப் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தார்கள். அப்பொழுது 3023 ஹெக்டர் நிலத்தை கையகப்படுத்தினார்கள். இப்பொழுது நாங்கள் சாலை அமைக்க இடம் எடுத்தால், மக்கள் பாதிப்பதாகச் சொல்கிறார்கள்.

சாலை அமைக்க நிலம் கொடுப்பவர்களுக்கு புதிய நில எடுப்பு சட்டத்தின்படி நல்ல இழப்பீட்டுத் தொகை கொடுக்கப்படுகிறது. தென்னை மரமென்றால் கிட்டத்தட்ட ரூபாய் 35 ஆயிரத்திலிருந்து ரூபாய் 40 ஆயிரம் வரை கொடுக்கின்றோம். நானே என்னுடைய தோட்டத்தில் குத்தகைக்கு விட்டதில், ஒரு தென்னை மரத்திற்கு வருடத்திற்கு ரூபாய் 900 தான் கொடுக்கிறார்கள். ஆனால், நாங்கள் கிட்டத்தட்ட ரூபாய் 35 ஆயிரம் கொடுக்கின்றோம். குறைந்தபட்சம் 6 சதவிகித வட்டி கணக்கிட்டாலும் கிட்டத்தட்ட ஒரு மரத்திற்கு ரூபாய் 2 ஆயிரம் ஆகிறது, பாடுபடாமலே ரூபாய் 2000 அரசாங்கம் கொடுக்கிறது, யாருக்கும் இழப்பு கிடையாது, மாமரம், நெல்லிக்காய் மரம், பனைமரம் என்று என்னென்ன மரங்கள் இருக்கிறது அந்தந்த மரத்திற்குத் தக்கவாறு விலை நிர்ணயித்து இழப்பீட்டுத் தொகை கொடுக்கின்றார்கள். மாட்டுக் கொட்டகையாக இருந்தாலும் கொடுக்கிறார்கள். வீடு இருந்தால், வீட்டிற்குத் தகுந்த இழப்பீட்டுத் தொகை கொடுக்கின்றார்கள். இப்பொழுது பழைய முறையிலெல்லாம் கிடையாது, இன்றைக்கு புதிய முறையை கையாண்டு, மார்பிள் பதித்தால், சதுர அடிக்கு ரூபாய் 300/–, ரூபாய் 400/– கொடுக்கின்றோம், எந்த மாற்றமும் கிடையாது. அதுமட்டுமல்ல, சாலை அமைக்கின்ற இடத்தில் அரை ஏக்கர், ஒரு ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்களிடமிருந்து நிலம் எடுக்கப்பட்டால், அவர்களுக்கு அரசாங்கம் இடம் கொடுத்து, அங்கே பசுமை வீடும் கட்டித்தரும். சாலை வசதி, தண்ணீர் வசதி அனைத்தும் செய்து தருகிறோம். எந்தவிதத்திலும் விவசாயிகள் பாதிக்கப்படுவது கிடையாது.

ஆகவே, வேண்டுமென்றே, திட்டமிட்டு, சில அரசியல்வாதிகளும், சில அமைப்புகளும் பொய்யாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். பக்கத்திலிருக்கின்ற மலையை எப்படி எடுக்க முடியும். எப்படிப் பொய் பேசுகிறார்கள், பச்சைப் பொய் அத்தனையும், நாட்டு மக்களை எப்படி ஏமாற்றுகிறார்கள். ஏனென்றால், அரசியல் ரீதியாக யாரும் எங்களைச் சந்திக்க முடியவில்லை, எங்களை எதிர்த்து யாரும் எதுவும் பண்ணமுடியவில்லை, அரசியல் ரீதியாக நேரடியாக எதிர்க்க முடியவில்லை. நாம் கொண்டு வருகின்ற திட்டத்தை எதிர்க்கின்றார்கள். எதிர்காலத்தில் மக்களுக்குத்தான் நன்மை பயக்கின்ற திட்டம்.

இன்றைக்குக்கூட தினகரன் பத்திரிகையில் வருடத்திற்கு 16,214 பேர் சாலை விபத்தில் இறக்கின்றார்கள் என்று பத்திரிகையிலே போட்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட வருடத்திற்கு 64,000 சாலை விபத்துக்கள் ஏற்படுவதாக சொல்லியிருக்கிறார்கள். இதனால் எவ்வளவு உயிர் இழப்பு ஏற்படுகிறது. இவ்வளவு நபர்கள் இறக்கின்றார்கள் என்று சொன்னால் அவர்களை காப்பாற்றுவது தப்பா ? சாலை விபத்துக்களைத் தடுப்பதற்கு, நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய சாலை அமைக்க வேண்டும். தமிழகத்திற்கு இந்தச் சாலையை ஏற்படுத்திக் கொடுக்கின்றார்கள். சேலம் மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும் மாவட்டச் சாலைகள், மாநில நெடுஞ்சாலைகளை விரிவு படுத்தி, தரம் உயர்த்தி, நல்ல முறையில் விபத்தில்லா சாலையை அமைப்பதற்காக அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. இதற்குத் தேவையான நிதியை மத்திய அரசு கொடுக்கின்றார்கள். இதுவரைக்கும் இவ்வளவு நிதி கொடுத்த வரலாறே கிடையாது. சுமார் 75 ஆயிரம் கோடி தமிழகத்திற்கு தருவதாக மத்திய அரசு நமக்கு தெரிவித்திருக்கிறது.

இன்றைக்கு எத்தனை பாலம் கட்டிக் கொடுத்திருக்கின்றோம். சேலம் மாவட்டத்தில் மட்டும் ஒரு இரயில்வே கேட்டில்கூட இனி நிற்க வேண்டிய அவசியம் இல்லை. சேலம், ஓமலூர் தாலுகா இரயில்வே கடவு எண்.7 சாலையில் பாலம் கட்டுவதற்கு ரூபாய் 18 கோடியில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, நிர்வாக ஒப்புதலும் வழங்கப்பட்டிருக்கிறது. ஓமலூர் தாலுகா,

ஓமலூர் இரயில்வே கடவு எண்.10 சாலையில் தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, நிர்வாக ஒப்புதலும் வழங்கப்பட்டிருக்கிறது. ஓமலூர் தாலுகா, அருகே இரயில்வே கடவு எண்.15–ல் ரூபாய் 19.6 கோடி மதிப்பீட்டில், மதிப்பீடு தயாரிக்கும் பணி துவங்கப்பட்டுள்ளது. மேட்டூர் தாலுகா காரிப்பட்டி மற்றும் குட்டப்பட்டி இரயில்வே கடவு எண்.18–ல் மேம்பாலம் கட்டுவதற்கு ரூபாய் 24.87 கோடி மதிப்பீட்டில் மதிப்பீடு தயாரிக்கும் பணி துவங்கப்பட்டுள்ளது. மேட்டூர் தாலுகா இரயில்வே கடவு எண்.21–ல் சாலை மேம்பாலம் ரூபாய் 7.6 கோடி மதிப்பீட்டில் மதிப்பீடு தயாரிக்கும் பணி துவங்கப்பட்டுள்ளது. ஆக, இங்கிருக்கிற அனைத்து இரயில்வே கடவுகளிலும் உயர்மட்டப்பாலம் கட்டப்படும். அதேபோல, சேலம் டவுனில், லீ பஜார், செவ்வாய்பேட்டையில் பாலம் முடிவுறுத் தருவாயில் இருக்கிறது. சேலம் முள்ளுவாடிகேட் இரயில்வே பாலம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது, மற்றொன்று கட்டப்பட்டு வருகிறது. வாழப்பாடி இரயில்வே கேட்டில் மேம்பாலத்திற்கு நிலம் எடுக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அதேபோல கல்வித் துறையைப் பொறுத்தவரை, தொடக்கப்பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 49 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் உயர்த்தப்பட்டிருக்கிறது.

இலவச வீட்டுமனைப் பட்டா ரூபாய் 225.93 கோடி மதிப்பீட்டில் 82,433 நபர்களுக்கு கொடுத்திருக்கின்றோம். சுயமாக மகளிர் தொழில் செய்வதற்காக, மகளிர் சுயஉதவிக் குழுவிற்கு, கடனுதவி 86,437 மகளிருக்கு ரூபாய் 2045 கோடி கடனாக வழங்கப்பட்டுள்ளது. கூட்டுறவுத் துறையின் மூலமாக பல்வேறு வகையான கடனுதவிகள் 37,32,626 நபர்களுக்கு ரூபாய் 12 ஆயிரத்து 776 கோடியே 31 இலட்சம் மதிப்பீட்டில் கொடுத்திருக்கின்றோம். இத்தனையும் நாங்கள் செய்திருக்கின்றோம், இன்னும் செய்யப்போகிறோம்.

இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகமும், எதிர்க்கட்சிகளும் வேண்டுமென்றே திட்டமிட்டு இந்த ஆட்சி மீது குற்றம் சுமத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களால் அரசியல்

ரீதியாக எதிர்கொள்ள முடியவில்லை. சிறப்பான திட்டங்களை இன்றைக்கு செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களும், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களும் கொண்டு வந்த திட்டங்களையெல்லாம் நாங்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம். அவர்கள் கண்ட கனவையெல்லாம் அம்மாவினுடைய அரசு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, வேலைக்குச் செல்கின்ற பெண்களுக்கெல்லாம், ரூபாய் 25 ஆயிரம் ரூபாய் மானியத்தில் கிட்டத்தட்ட 3,34,000 நபர்கள் அம்மா இருசக்கர வாகனம் பெறுவதற்கு பதிவு செய்திருக்கிறார்கள், அத்தனைபேருக்கும் படிப்படியாக அம்மாவினுடைய அரசு கொடுக்க இருக்கிறது என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

மருத்துவமனை, எடப்பாடியில் ரூபாய் 4 கோடியில் கட்டி முடித்திருக்கின்றோம். கோனேரிப்பட்டியில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம், நங்கவள்ளி ஒன்றியத்தில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் கட்டிக் கொடுத்திருக்கின்றோம். கால்நடை மருந்தகம் கட்டிக் கொடுத்திருக்கின்றோம். சமுத்திரத்தில் நானே நேரடியாக வந்து ஆரம்ப சுகாதார நிலையத்தை திறந்து வைத்துச் சென்றேன். ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட மக்கள் தங்களுடைய பகுதியிலே சிகிச்சை பெற்றுக் கொள்வதற்காக ஆரம்ப சுகாதார நிலையங்களை கட்டிக் கொடுத்த அரசு அம்மாவினுடைய அரசு. அதேபோல, ஆங்காங்கே திருமண மண்டபங்கள் கட்டிக் கொடுப்பதற்கு அம்மாவினுடைய அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

அம்மாவினுடைய அரசு உங்களுடைய அரசு, ஏழை, எளியவர்களின் அரசு. அவர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதுதான் எங்களுடைய இலட்சியம். அந்த இலட்சியக் கனவை அம்மாவினுடைய அரசு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, குடிநீர் தேவையை பூர்த்தி செய்வதற்கு அம்மாவினுடைய அரசு எடப்பாடி

நகரத்திற்கு தேவையான நிதிகளை ஒதுக்கி, அம்மாவே அடிக்கல் நாட்டி, அம்மாவே திறந்து வைத்து, இன்றைக்கு தங்குதடையில்லாமல் எடப்பாடி நகர மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட காவிரி தண்ணீர் கிடைக்கிறது.

அதேபோல, எடப்பாடி, கொங்கணாபுரம், மகுடஞ்சாவடி ஒன்றியம் ஆகிய மூன்று ஊராட்சி ஒன்றியங்களுக்கும் கூட்டுக் குடிநீர் திட்டத்தை உருவாக்கி, அம்மாவே அடிக்கல் நாட்டி, அம்மாவே திறந்து வைத்து, இன்றைக்கு தேவையான குடிநீர் வசதி செய்து கொடுத்திருக்கின்றோம். இப்பொழுது மேச்சேரி, நங்கவள்ளி ஒன்றியத்தில் இருக்கின்ற மக்களுக்கு நிலையான, பாதுகாக்கப்பட்ட காவிரி தண்ணீர் வழங்குவதற்கு அம்மா அவர்கள் அறிவித்தார்கள், அம்மாவினுடைய அரசு அதை செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. இன்னும் 3, 4 மாதங்களில் அந்தப் பணி நிறைவு பெற்று, தண்ணீர் வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

கிட்டத்தட்ட, 48 ஆண்டு காலம் காவிரி நதிநீர் பிரச்சினையை தீர்க்க முடியாத போராட்டத்திற்கு, இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சட்டப் போராட்டம் நடத்தி அவருடைய வழியிலே இன்று நம்முடைய அரசு உச்சநீதிமன்றத்தின் மூலமாக நல்ல தீர்ப்பைப் பெற்று, இன்றைக்கு காவிரி மேலாண்மை ஆணையம் அமைக்கப்பட்டிருக்கிறது. இது சாதாரண விஷயமல்ல, வரலாற்றுச் சாதனை. அப்படிப்பட்ட வரலாற்றுச் சாதனையை அம்மாவினுடைய அரசு இன்றைக்கு படைத்திருக்கிறது, நமக்கு ஒரு அங்கீகாரம் கிடைத்திருக்கிறது. காவிரி மேலாண்மை வாரியம், ஜூலை இரண்டாம் தேதி, முதல் கூட்டம் கூட்டவிருக்கிறது. பல ஆண்டுகாலமாக விவசாயிகள் போராடி, தீர்வு காணமுடியாத நிலையில், அம்மா அவர்களால் உச்சநீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கின் அடிப்படையிலே இன்றைக்கு வெற்றி பெற்று, அதை அமல்படுத்தக்கூடிய சூழ்நிலையை உருவாக்கி தந்திருக்கின்றோம். மிகப் பெரிய பிரச்சினை இன்று தீர்ந்திருக்கிறது. நாம் பெறுவதற்கு தேவையான நீரைக் கொடுப்பதற்கு காவிரி மேலாண்மை ஆணையம், காவிரி நதிநீர் முறைப்படுத்தும் குழு இரண்டையும்

ஏற்படுத்துவதற்கு, அம்மாவினுடைய அரசு பல்வேறு முயற்சிகளை எடுத்து, சட்டப்போராட்டத்தின் மூலமாக தீர்வு காணப்பட்டு, இன்றைக்கு அமல்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, விவசாய பெருங்குடி மக்களின் நீண்டகாலக் கோரிக்கையை அம்மாவினுடைய அரசு நிறைவேற்றியிருக்கிறது. இதன் மூலமாக 28 மாவட்ட மக்களுக்கு நிலையான காவிரி தண்ணீர் கிடைக்கிறது. இலட்சக்கணக்கான விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுவதற்கு உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

இந்தத் தொகுதியில் மட்டுமல்ல, 234 தொகுதிகளிலும் பல்வேறு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, எடப்பாடி சட்டமன்றத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, சட்டமன்ற உறுப்பினராகி, அதற்குப் பிறகு, இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆசி பெற்று, நெடுஞ்சாலைத் துறை அமைச்சராகி, அதற்குப் பிறகு, 2016–ஆம் ஆண்டு கூடுதலாக பொதுப்பணித் துறையும் கொடுத்து, அதற்குப் பிறகு அம்மாவினுடைய மறைவிற்குப் பிறகு முதலமைச்சர் பதவியும் நம்முடைய தொகுதிக்கு கொடுத்திருக்கின்றார்கள். இன்று எந்த இடத்திற்குச் சென்றாலும், எடப்பாடி என்று சொன்னால் முதலமைச்சர் தொகுதியா ? என்று கேட்கின்ற அளவிற்கு மக்கள் அங்கீகாரம் கொடுத்திருக்கின்றார்கள். அந்தப் பெயர் நம்முடைய தொகுதிக்கு கிடைத்திருக்கின்றது. இந்த பெயரும், புகழும் நீங்கள் கொடுத்தது என்பதை இந்த நேரத்திலே நினைவு கூர்ந்து வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகின்றேன்.

நன்றி.

வணக்கம்.

-----

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**